# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2310/49 - 2022 දෙසැම්බර් මස 16 වැනි සිකුරාදා - 2022.12.16

*2310/49 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**சப்ரகமுவ மாகாண மாகாண சபை**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்ரகமுவ மாகாணத்தின் ஆறாவது மாகாண சபையின் பதவிக் காலம் 2017 செத்தெம்பர் 26 ஆம் திகதி அன்று முடிவடைந்ததால், 1987 ஆம் ஆண்டின்42 ஆம் இலக்கம் உடைய மாகாண சபைச் சட்டத்தின் 27(அ) பிரிவிற்கு அமைய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய அனுமதி வழங்கல்*

*2023 ஆம் ஆண்டின் சனவரி 01 இலிருந்து திசெம்பர் 31 வரையிலான வருடத்திற்காக சேவை செலவினங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கும், அந்த சேவை செலவினங்களுக்காக சப்ரகமுவ மாகாணத்தினுள் கடன் பெற்றுக் கொள்ள அதிகாரம் வழங்கவும், அந்தக் காலத்திற்குள் சப்ரகமுவ மாகாண சபையின் ஏதும் நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீட்டை வழங்கவும், அந்த நடவடிக்கைகளுக்காக செலவிடுவதற்காக அக்காலத்திற்கு தேவையான பணத்தை சப்ரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது பணமாக அல்லது முற்பணமாக கொடுப்பனவு செய்ய இடமளிப்பதும், சப்ரகமுவ மாகாண சபை நிதியத்திற்கு அதனை மீள செலுத்துவதற்குரிய ஏற்பாட்டிற்கு இடமளிப்பதும் மற்றும் மேற்கூறிய விடயங்கள் மற்றும் தொடர்பான அல்லது அதற்கு தொடர்புடைய விடயங்களுக்காக ஏற்பாடுகளை செய்வதற்குறிய கட்டளை ஆகும்.*

*இலங்கைச் சனநாயக சேசலிசக் குடியரசின் சப்ரகமுவ மாகாண ஆளுநராகிய என்னால் பின்வருமாறு பிறப்பிக்கப்படுகிறது.*


1A - PG 6110 — 11 (2022/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அனுமதி வழங்கல்

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்ரகமுவ மாகாணத்தின் ஆறாவது (6) மாகாண சபையின் பதவி காலம் 2017 செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி அன்று முடிவடைந்ததால், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபைச் சட்டத்தின் 27(அ) ஆம் பிரிவின் படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் 2023, சனவரி மாதம் 01 ஆந் திகதி ஆரம்பித்து 2023, திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஒரு வருட காலத்திற்கு சப்ரகமுவ மாகாண சபையின் சேவை செலவினங்களுக்கு தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ரூபா. ஐம்பத்தி ஒரு பில்லியன் நூற்று பத்தொன்பது மில்லியன் (ரூ. 51,119,000,000) உடைய சப்ரகமுவ மாகாண சபை செலவினங்களை சப்ரகமுவ மாகாண நிதியத்தில் இருந்து செலவு செய்வதற்கு அந்த மாகாணத்தின் பிரதான செயலாளருக்கும் மற்றும் கணக்களிக்கும் அதிகாரிகளுக்கும் இதன் மூலம் அனுமதி வழங்கப்படுகிறது.

2023 ஆம் வருடத்திற்கான ஒதுக்கீடு

2. (1) ஏதேனும் தொகையை செலவழிப்பதற்காக அதிகாரம் வழங்குவதுடன் வேறு ஏதும் சட்டத்திற்கு பாதிப்பின்றி, இக்கட்டளையில் "ஒரு வருட" என்று குறிப்பிடப்படுகின்ற, 2023 சனவரி மாதம் 01 ஆந் திகதி ஆரம்பித்து 2023, திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் காலத்திற்கு சேவை செலவினங்களுக்கு தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ரூபா. ஐம்பத்தி ஒரு பில்லியன் நூற்று பத்தொன்பது மில்லியன் (ரூ. 51,119,000,000) உடைய சப்ரகமுவ மாகாண செலவினங்கள் :-

(அ) சப்ரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது பணமாகவோ அல்லது முற்பணமாகவோ கொடுப்பனவு செய்வதற்காக இதன் மூலம் அதிகாரம் வழங்கப்படும் கொடுப்பனவுகளின் மற்றும்

(ஆ) சப்ரகமுவ மாகாணத்தினுள் கடனாக பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்திலிருந்தோ அல்லது சப்ரகமுவ மாகாண சபைக்காக பெற்றுக் கொள்வதற்காக இதன் மூலம் அதிகாரம் வழங்கும் கடனாக பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்திலிருந்து தீர்க்க வேண்டும். இங்கு மேற்குறிப்பிட்ட ரூபா. ஐம்பத்தி ஒரு பில்லியன் நூற்று பத்தொன்பது மில்லியன் (ரூ. 51,119,000,000) ஆகிய பணத்தை இந்த உத்தரவின் முதலாம் அட்டவைணயில் உரியபடி செலவு செய்ய முடியும்.

(2.) இந்த பிரிவின் (I) வது உப பிரிவின் ஏற்பாடுகள் சப்ரகமுவ மாகாண சபைக்காக மற்றும் அதற்காக கடன் பெற்றுக் கொள்வதற்காக அதிகாரம் வழங்குகின்ற வேறு ஏதும் எழுத்து மூலமான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு பாதிப்பின்றிய செயற்படுத்தல் வேண்டும்.

2023 ஆம் வருடத்திற்காக சப்ரகமுவ மாகாண சபையின் சில நடவடிக் கைளுக்காக நிதி வழங்கல்.

3. (1). 2023 நிதி வருட கால எல்லைக்குள், இந்த அட்டளையின் இரண்டாம் அட்டவைணயின் IV வது நிரலில் காணப்படும் ஒவ்வொரு நடவடிக்கையிலிருந்தும் சப்ரகமுவ மாகாண சபைக்கு கிடைக்கும் VI வது நிரலில் காணப்படும் பெறுவனவுகள் அந்த நடவடிக்கையின் கணக்கிற்கு செலவு வைக்க வேண்டியதுடன், அவ்வாறு செலவு வைத்த பெறுவனவுகளின் மொத்தம், VI வது நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த எல்லைக்கு குறைவாக இருக்கக் கூடாது.

4. இந்த கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் IV வது நிரலில் காணப்படும் ஒவ்வொரு நடவடிக்கை தொடர்பில், 2023 நிதி வருடத்தில் சப்ரகமுவ மாகாண சபையினால் செய்யப்படுகின்ற செலவுகள், அந்த காலத்தினுள் அந்நடவடிக்கையினால் சப்ரகமுவ மாகாண சபையினால் பெற்றுக் கொள்ளும் பெறுவனவுகள் மூலம் கொடுப்பனவு வெய்தல் வேண்டும். எனினும் அச்செலவினங்கள் அந்த அட்டவணையில் V ஆம் நிரலிற்கு நிகரான குறிப்பில் காணப்படும் உச்ச எல்லையை விட அதிகமாக இருக்கக் கூடாது.

5. இந்த கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் IV வது நிரலில் காணப்படும் ஏதேனும் நடவடிக்கை தொடர்பில், 2023 ஆம் வருட இறுதியில் நிலுவையாக காணப்படும் மீதி, அந்த அட்டவணையில் VII ஆர் நிரலுக்கு நிகரான குறிப்பில் காணப்படும் ஆகக் கூடிய எல்லையை மீறக் கூடாது. மேலும், அக்கால இறுதியில் அந்நடவடிக்கைக்கான முழுப் பொறுப்புகள் VIII ஆம் நிரலிற்கு நிகரான குறிப்பில் காணப்படும் உச்ச எல்லையை விட அதிகமாக இருக்கக் கூடாது.

6. 2023 நிதி வருடத்தினுள் ஏதேனும் சந்தர்ப்பத்தில் இந்த கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் IV வது நிரலில் காணப்படும் ஏதேனும் நடவடிக்கை மூலம் சப்ரகமுவ மாகாண சபைக்கு கிடைக்கும் பெறுவனவுகள், அந் நடவடிக்கை தொடர்பில், அப்ரகமுவ மாகாண சபையினால் செய்யப்படும் செலவினங்களை ஈடுசெய்ய போதாமல் இருப்பின், அச்செலவினங்களை ஈடுசெய்வதற்காக என்று ஆளுநரினால் கருதும் பணத்தை சப்ரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது பண முற்பணமாக கொடுப்பனவு செய்ய வேண்டுமென ஆளுநர் கருதும் பணம் சப்ரகமுவ மாகாண நிதியத்தால் அல்லது முற்பணமாக கொடுப்பனவு செய்ய வேண்டுமென அவரால் நியமம் ஒன்றின் மூலம் காலத்திற்கு காலம் கட்டளையிட முடியும். எனினும் அவ்வாறு வழங்கப்படும் மொத்த முற்பணத்தின் அந்த அட்டவணையின் ஐந்தாம் நிரலில் இணை குறிப்பில் உள்ள உச்ச எல்லையை தாண்டக் கூடாது. அந்த நடவடிக்கைக்காக முற்பணமாக அவ்வாறு வழங்கப்பட்ட பணம் ஏதும், என்னுடைய உத்தரவின் மூலம் செய்யப்படுகின்ற கட்டளையின் பிரகாரம் சப்ரகமுவ மாகாண சபை நிதியத்திற்கு மீள செலுத்த வேண்டும்.

*2023 வருடத்தினுள் 3 ஆம் பிரிவில் உள்ள நடவடிக்கை தொடர்பான செலவுகளுக்கு சப்ரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது பணத்திலிருந்து முற்பணம் கொடுப்பனவு செய்தல்*

7. (1). இந்த உத்தரவில் முதலாம் அட்டவணையில் உள்ள ஏதேனும் தலைப்பின் கீழுள்ள ஏதேனும் நிகழ்ச்சித் திட்டத்தின் மீண்டெழும் செலவினங்களுக்க அந்த அட்டவணையின் ஏற்பாடுகளின் பிரகாரம், ஒதுக்கீடு செய்யப்பட்டதானதும், எனினும் செலவு செய்யப்படாததும் அல்லது எதிர்காலத்தில் செலவு செய்யப்படாத என எதிர்ப் பார்க்கக் கூடியதுமான நிதியை, அதே நிழ்ச்சித் திட்டதின் மீண்டெழும் அல்லது மூலதன செலவினமாகவோ ஒதுக்கீடு செய்வதற்கு பிரதான செயலாளரின் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் அலுவலினதோ அத்தரவின் பிரகாரம் மாற்ற முடியும்.

(2). இந்த உத்தரவில் முதலாம் அட்டவணையில் உள்ள ஏதேனும் தலைப்பின் கீழ் காணப்படும் மூலதன செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்த ஒதுக்கீட்டை அதே தலைப்பின் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து அல்லது செயற்திட்டத்திலிருந்து வெளியே மாற்றுவதற்கு பிரதான செயலாளரினால் மாத்திரமே முடியும்.

*நிகழ்ச்சித்திட்ட மீண்டெழும் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட எனினும் செலவிடப்படாத நிதி அதே நிகழ்ச்சித்திட்டத்தில் வேறு ஒதுக்கீட்டிற்கு அல்லது அதே செலவின தலைப்பின் கீழ் உள்ள வேறு நிகழ்ச்சித் திட்டத்திற்கோ மாற்றுவதற்குரிய அதிகாரம்*

8. (1). அதிகாரம் வழங்கப்பட்ட செலவினங்களை செய்வதற்கு வரிகளினால் மற்றும் வேறு மூலங்களிலிருந்து கிடைக்கும் பெறுவனவுகளினால், எதிர்ப்பார்க்கப்பட்ட தொகையை காட்டிலும் குறைவடைய முடியும் என்பதால்: அல்லது

(2). ஏதேனும் கருமத்திற்காக அல்லது கருமங்களுக்காக ஆரம்ப ஒதுக்கீட்டு தொகையானது மேலும் அவசியமில்லையென ஆளுநர் திருப்திப்படும் சந்தரப்பத்தில், சப்ரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்தோ அல்லது பணமாகவோ, தன்னால் விநியோகிக்கப்பட்ட ஆணைச்சீட்டு அதிகாரத்தின் கீழ் செலவிடுவதற்காக ஏற்கனவே விடுவித்த பணத்தை முழுமையாகவோ மீளப்பெறல், ஆளனரினால் செய்ய முடியும்,

9. ஆளுனரினால் :-

(அ). இந்த கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் V ஆம் நிரலில், VII நிரலில் மற்றும் VIII ஆம் நிரலில் காணப்படும் உச்ச எல்லைகளில் ஏதேனும்,

(ஆ) இந்த கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் VI ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த எல்லை : உத்தரவு மூலம் 2024 மே மாதம் 31 ஆம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர். மாற்றுவதற்கோ அல்லது இணைக்கவோ முடியும்.

*இந்த கட்டளையின் இரண்டாம் அட்டவணையில் காணப்படும் உச்ச அல்லது ஆகக் குறைந்த எல்லையை மாற்றுவதற்கு ஆளுநருக்கு உள்ள அதிகாரம்*

இந்த பிரிவின் கீழ் செய்யப்பட்ட எந்தவொரு கட்டளையும், ஆளுநரினால் அதனை அனுமதித்திருந்தாலே அன்றி, செல்லுபடியாகாது.

அவ்வாறான எந்தவொரு கட்டளையும் இடப்படுகின்ற குறிப்பிட்ட திகதியில், அத்தினத்திற்கு முந்திய தினத்திலிருந்து அது அமுலாக்கப்பட வேண்டியதாக அங்கு வெளிப்படையாக குறிப்பிட்டிருந்தால் அவ்வாறு வெளிப்படையாக குறிப்பிட்டிருந்த திகதியில் இருந்து அமுலுக்கு வருவதாக கருதுதல் வேண்டும்.

10. ஆளுநரினால், எழுத்து வடிவிலான உத்தரவின் மூலம், இந்த கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் பொருத்தமான நிரல்களுக்கு ஏதேனும் செயற்பாட்டை சேர்ப்பதன் மூலமும் :-

(அ) அந்த செயற்பாடு தொடர்பிலான சகல உச்ச எல்லைகள் அல்லது ஏதேனும் எல்லையொன்று,

(ஆ). அந்த செயற்பாடு தொடர்பிலான குறைந்தபட்ச எல்லைக்கு சேர்ப்பதன் மூலம் அட்டவணையை திருத்தம் செய்யலாம்.

11. இந்த அனுமதி சப்ரகமுவ மாகாணத்தின் ஏழாவது (7) மாகாண சபை கூட்டத்திற்காக அழைக்கும் திகதியிலோ அல்லது, மாகாண சபை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதியில் இருந்தோ அல்லது மூன்று மாத (3) கால எல்லை முடிவடையும் திகதி அல்லது, 2023 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி அல்லது என்ற இரண்டு நாட்களில் முதலில் வரும் திகதியுடன் முடிவடைக்கிறது.

**டிக்கிரி கொப்பேகடுவ,**
கௌரவ ஆளுநர்,
சபரகமுவ மாகாண சபை.

2022, நவெம்பர் 30.

## அதிகார பலம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின சப்ரகமுவ மாகாணத்தின் ஆறாவது (6) மாகாண சபையின் பதவி காலம் 2017 செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதியுடன் முடிவடைந்ததால், 1987 ஆம் ஆண்டின் 42 இலக்கம் ஆம் ஆண்டின் கொண்ட மாகாண சபை சட்டத்தின் 27(அ) பிரிவின் படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் 2023, சனவரி மாதம் 01 ஆம் திகதியில் ஆரம்பித்து 2023, திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஒரு வருட காலத்தினுள் சப்ரகமுவ மாகாண சபையின் சேவை செலவினங்களுக்கு தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ரூபா. ஐம்பத்தி ஒரு பில்லியன் நூற்று பத்தொன்பது மில்லியன் (ரூ. 51,119,000,000) உடைய சப்ரகமுவ மாகாண செலவினங்களை சப்ரகமுவ மாகாண சபை நிதியத்தில் இருந்து செலவு செய்வதற்கு அந்த மாகாணத்தின் பிரதான செயலாளருக்கும் மற்றும் கணக்களிக்கும் அதிகாரிகளுக்கும் இதன் மூலம் அனுமதி வழங்கப்படுகிறது.

இந்த அனுமதி சப்ரகமுவ மாகாணத்தின் ஏழாவது (7 ஆவது) மாகாண சபை கூட்டத்திற்காக அழைக்கும் திகதியிலோ அல்லது, மாகாண சபை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதியில் அல்லது மூன்று மாத (3) கால எல்லை முடிவடையும் திகதியிலோ அல்லது, 2023 திசெம்பர் மாதம் 31 ம் திகதியிலோ என்ற இரண்டு நாட்களில் முதலில் வரும் திகதியுடன் முடிவடைகிறது.

**டிக்கிரி கொப்பேகடுவ,**
கௌரவ ஆளுநர்,
சபரகமுவ மாகாண சபை.

2022, நவெம்பர் 30.

## அதிகார பலம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்ரகமுவ மாகாணத்தின் ஆறாவது (6) மாகாண சபையின் பதவிக் காலம் 2017 செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதியுடன் முடிவடைந்ததால், 1987ஆம் ஆண்டின் 42 இலக்கம் ஆம் கொண்ட மாகாண சபை சட்டத்தின் 27(அ) பிரிவின் படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் 2023, சனவரி மாதம் 01 ஆம் திகதியில் ஆரம்பித்து 2023, திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஒரு வருட காலத்தினுள் சப்ரகமுவ மாகாண சபையின் முற்பண கணக்கு நடவடிக்கைளுக்காக தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டள்ள இங்கு இரண்டாம் (II) அட்டவணையிலுள்ள செலவினங்களை சப்ரகமுவ மாகாண நிதியத்தில் இருந்து செலவு செய்வதற்கு அந்த மாகாணத்தின் பிரதான செயலாளருக்கும் மற்றும் கணக்களிக்கும் அதிகாரிகளுக்கும் இதன் மூலம் அனுமதி வழங்கப்படுகிறது.

இந்த அனுமதி சப்ரகமுவ மாகாணத்தின் ஏழாவது (7 ஆவது) மாகாண சபைக் கூட்டத்திற்காக அழைக்கும் திகதியிலோ அல்லது, மாகாண சபை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதியில் அல்லது மூன்று மாத (3) கால எல்லை முடிவடையும் திகதியிலோ அல்லது, 2023 திசெம்பர் மாதம் 31 ம் திகதியிலோ என்ற இரண்டு நாட்களில் முதலில் வரும் திகதியுடன் முடிவடைகிறது.

**டிக்கிரி கொப்பேகடுவ,**
கௌரவ ஆளுநர்,
சப்ரகமுவ மாகாண சபை.

*2022, நவெம்பர் 30.*

**முதலாவது அட்டவணை**

மாகாண சபை பொது சேவைகளுக்காக செலுத்த வேண்டிய தொகை

தலைப்பு 800 முதல் 861 வரை

| | |
|---|---|
| மீண்டெழும் செலவினங்கள் | 46,837,000,000.00 |
| மூலதன செலவு | 4,282,000,000.00 |
| மொத்தம் | 51,119,000,000.00 |

| தலைப்பு | நிறுவனங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் | மீண்டெழும் செலவு ரூபா | மூலதன செலவு ரூபா |
|---|---|---|---|
| 800 | கௌரவ ஆளுநர் அலுவலகம் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாண நிர்வாகம் | 108,761,600 | 3,000,000 |
| 801 | மாகாண சபை செயலாளர் அலுவலகம் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாண நிர்வாகம் | 259,816,000 | 1,000,000.00 |
| 802 | மாகாண அரச சேவை ஆணைக்குழு அலுவலகம் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாண நிர்வாகம் | 26,626,000 | 1,000,000.00 |
| 803 | கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு அலுவலகம் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாண நிர்வாகம் | 13,846,000 | - |
| 804 | பிரதான செயலாளர் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாண நிர்வாகம் | 274,995,000 | 366,000,000 |
| 805 | பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாண நிர்வாகம் | 58,510,000 | - |
| 806 | பிரதி பிரதான செயலாளர் (நிதி முகாமைத்துவம்) | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாண நிர்வாகம் | 75,445,000 | - |
| 807 | பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாணம் நிர்வாகம் | 68,106,000 | - |
| 808 | பிரதி பிரதான செயலாளர் (பொறியியற் சேவைகள்) | | |

| *தலைப்பு* | *நிறுவனங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டம்* | *மீண்டெழும் செலவு ரூபா* | *மூலதன செலவு ரூபா* |
|---|---|---|---|
| | 50 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - கட்டுமானம் மற்றும் வீதி பராமரிப்பு | 409,800,000 | - |
| 809 | மாகாண வருமான திணைக்களம் | | - |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாண நிர்வாகம் | 93,675,000 | |
| 810 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்தியம், மகளிர் விவகாரம், கூட்டுறவு வியாபாரம் மற்றும் உணவு, போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடகம் மற்றும் வீடமைப்பு, நிர்மானத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாண நிர்வாகம் | 216,549,800 | 36,000,000 |
| | 47ஆவது நிகழ்ச்சித்திட்டம் - போக்குவரத்துதிட்டம் | 50,000,000 | 28,000,000 |
| | 49 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மின்சாரம் மற்றும் எரிசக்தி சேவைகள் | | 11,000,000 |
| | 53 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - கூட்டுறவு அபிவிருத்தி | | 6,000,000 |
| | 60 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - சமூக அபிவிருத்தி | 90,000,000 | 218,000,000 |
| | 61 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - வீடமைப்பு மற்றும் சமூக பொது வசதிகள் | 2,356,000 | 23,000,000 |
| | 63 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தோட்ட வீடமைப்பு | | 37,000,000 |
| | 71 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - வைத்தியசாலை சேவைகள் | 150,000,000 | 1,170,000,000 |
| | 72 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - பொது சுகாதார சேவைகள் | 80,000,000 | 495,000,000 |
| | 73 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - உள்நாட்டு வைத்திய சேவைகள் | | 68,000,000 |
| | 93 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - சமய மற்றும் கலாச்சார நடவடிக்கை | | - |
| | 96 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மகளிர் அபிவிருத்தி | | 9,000,000 |
| 811 | சுகாதார திணைக்களம் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாண நிர்வாகம் | 399,400,000 | |
| | 71 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - வைத்தியசாலை சேவைகள் | 10,168,000,000 | |
| | 72 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - பொது சுகாதார சேவைகள் | 1,813,430,000 | |
| 812 | ஆயுர்வேத திணைக்களம் | | |
| | 73 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - உள்நாட்டு வைத்திய சேவைகள் | 678,475,000 | |
| 813 | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | | |
| | 53 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - கூட்டுறவு அபிவிருத்தி | 137,706,000 | |
| 814 | உள்ளூராட்சி திணைக்களம் | | |
| | 60 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - சமூக அபிவிருத்தி | 3,080,970,000 | |
| 820 | மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உல்லாசப் பிராயணத்துறை மற்றும் விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சு | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாண நிர்வாகம் | 98,249,000 | - |

| தலைப்பு | நிறுவனங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் | மீண்டெழும் செலவு ரூபா | மூலதன செலவு ரூபா |
|---|---|---|---|
| | 50 ஆவது நிகழ்ச்சிதி திட்டம் - கட்டுமானம் மற்றும் வீதி பராமரிப்பு | 936,000,000 | 350,000,000 |
| | 52 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - பிரதேச அபிவிருத்தி | | 30,000,000 |
| | 90 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - பொழுது போக்கு மற்றும் விளையாட்டு | | 56,000,000 |
| 821 | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் | | |
| | 90 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - பொழுது போக்கு மற்றும் விளையாட்டு | 94,690,000 | |
| 830 | சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு | | |
| | 03 ஆவது நிகழ்சித்தி திட்டம் - மாகாண நிர்வாகம் | 75,939,000 | - |
| | 51 ஆவது நிகழ்சித்தி திட்டம் - கைத்தொழில் அபிவிருத்தி | | 57,000,000 |
| | 60 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - சமூக அபிவிருத்தி | 55,060,000 | 72,000,000 |
| | 95 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - சமூக பாதுகாப்பு | | 102,000,000 |
| 831 | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | | |
| | 51 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - கைத்தொழில் அபிவிருத்தி | 191,820,000.00 | |
| 832 | நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் | | |
| | 95 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - சமூக பாதுகாப்பு | 540,671,000 | |
| 840 | கல்வி, தகவல் தொழிநுட்பம் மற்றும் கலாச்சார விவகார அமைச்சு | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாண நிர்வாகம் | 173,139,000 | 30,000,000 |
| | 80 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - ஆரம்பக் கல்வி | 50,000,000 | 81,000,000 |
| | 81 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - இரண்டாம் நிலைக் கல்வி | 300,000,000 | 690,000,000 |
| | 93 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - சமய மற்றும் கலாசார நடவடிக்கைகள் | 25,951,000 | 11,000,000 |
| 841 | கல்வித் திணைக்களம் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாண நிர்வாகம் | 1,004,037,000 | |
| | 80 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - ஆரம்பக் கல்வி | 8,483,850,000 | |
| | 81 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - இரண்டாம் நிலைக் கல்வி | 15,431,800,000 | |
| | 87 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - கல்வி பங்கேற்றலை மேம்படுத்தல் | 34,755,000 | |
| | 88 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - கல்வி திட்டமிடல், நிர்வகித்தல் மற்றும் சேவை வழங்கல் | 21,800,000 | |

| தலைப்பு | நிறுவனங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் | மீண்டெழும் செலவு ரூபா | மூலதன செலவு ரூபா |
|---|---|---|---|
| 850 | காணி, நீர்ப்பாசன, விவசாய மற்றும் கால்நடை உற்பத்தி, கால்நடை சுகாதாரம் மற்றும் மீன்பிடி அமைச்சு | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாண நிர்வாகம் | 84,800,300 | 14,000,000 |
| | 40 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - காணி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி | | 8,000,000 |
| | 43 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் | 70,000,000 | 68,000,000 |
| | 44 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - விவசாய அபிவிருத்தி | | 123,000,000 |
| | 45 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - கால்நடை அபிவிருத்தி | | 103,000,000 |
| | 55 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - உணவு பாதுகாப்பு மற்றும் பராமரித்தல் | | 15,000,000 |
| 851 | காணி ஆணையாளர் திணைக்களம் | | |
| | 40 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - காணி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி | 94,865,000 | |
| 852 | விவசாய திணைக்களம் | | |
| | 44 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - விவசாய அபிவிருத்தி | 378,596,000 | |
| 853 | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரம் திணைக்களம் | | |
| | 45 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - கால்நடை அபிவிருத்தி | 359,765,000 | |
| 861 | மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களம் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித்திட்டம் - மாகாண நிர்வாகம் | 34,727,300 | |
| | | **46,837,000,000** | **4,282,000,000** |

**இரண்டாவது அட்டவணை**

2023 - மதிப்பீடு

**முற்பண கணக்கு நடவடிக்கைகள்**

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சு /திணைக்களம் | விடய இலக்கம் | முற்பண வகைகள் | உச்ச எல்லை | குறைந்த பட்ச பெறுகை எல்லை | வரவு மீதியின் அதிகபட்ச எல்லை | பொறுப்புக் களின் எல்லை |
| | முழுகூட்டுத்தொகை | | | 2,348,400,000 | 883,937,000 | 6,120,660,000 | 5,200,000 |
| | மாகாண அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு | | உப கூட்டுத் தொகை | 2,209,700,000 | 828,037,000 | 6,074,810,000 | - |
| 1 | கௌரவ ஆளுநர் அலுவலகம் | 80001 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 2,000,000 | 800,000 | 5,417,000 | - |
| 2 | மாகாணசபை செயலாளர் அலுவலகம் | 80101 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 1,600,000 | 900,000 | 5,563,000 | - |

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சு /திணைக்களம் | விடய இலக்கம் | முற்பண வகைகள் | உச்ச எல்லை | குறைந்த பட்ச பெறுகை எல்லை | வரவு மீதியின் அதிகபட்ச எல்லை | பொறுப்புக் களின் எல்லை |
| 3 | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம் | 80201 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 1,200,000 | 600,000 | 4,631,000 | - |
| 4 | கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு அலுவலகம் | 80301 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 1,200,000 | 500,000 | 3,657,000 | - |
| 5 | பிரதான செயலாளர் | 80401 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 18,000,000 | 6,500,000 | 50,500,000 | - |
| 6 | பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) | 80501 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 4,000,000 | 900,000 | 11,700,000 | |
| 7 | பிரதி பிரதான செயலாளர் (நிதி முகாமைத்துவம்) | 80601 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 4,000,000 | 1,953,000 | 14,699,000 | |
| 8 | பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) | 80701 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 6,000,000 | 2,400,000 | 15,600,000 | |
| 9 | பிரதி பிரதான செயலாளர் (பொறியியற் சேவைகள்) | 80801 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 21,000,000 | 12,000,000 | 70,000,000 | - |
| 10 | மாகாண வருமான திணைக்களம் | 80901 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 5,000,000 | 2,500,000 | 11,500,000 | - |
| 11 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்தியம், மற்றும் மகளிர் விவகாரம், கூட்டுறவு வியாபாரம் மற்றும் உணவு, பயணிகள் போக்குவரத்து, மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடகம் மற்றும் வீடமைப்பு, நிர்மானத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81001 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 6,200,000 | 3,734,000 | 34,466,000 | - |
| 12 | சுகாதார திணைக்களம் | 81101 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 500,000,000 | 123,000,000 | 1,571,000,000 | - |
| 13 | ஆயுர்வேத திணைக்களம் | 81201 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 25,000,000 | 14,000,000 | 66,000,000 | - |
| 14 | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | 81301 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 9,000,000 | 4,000,000 | 24,300,000 | - |
| 15 | உள்ளூராட்சி திணைக்களம் | 81401 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 2,500,000 | 3,600,000 | 11,100,000 | - |
| 16 | மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய அடிப்படை வசதிகள் மற்றும் உல்லாசப் பிராயணத்துறை மற்றும் விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சு | 82001 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 2,500,000 | 1,800,000 | 10,396,000 | - |

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சு /திணைக்களம் | விடய இலக்கம் | முற்பண வகைகள் | உச்ச எல்லை | குறைந்த பட்ச பெறுகை எல்லை | வரவு மீதியின் அதிகபட்ச எல்லை | பொறுப்புக் களின் எல்லை |
| 17 | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் | 82101 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 2,000,000 | 950,000 | 6,331,000 | - |
| 18 | சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு | 83001 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 9,000,000 | 3,500,000 | 20,500,000 | - |
| 19 | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | 83101 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 14,000,000 | 9,000,000 | 30,000,000 | - |
| 20 | நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் | 83201 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 12,000,000 | 4,000,000 | 30,000,000 | - |
| 21 | கல்வி, தகவல் தொழிநுட்பம் கலாசார விவகார அமைச்சு | 84001 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 8,000,000 | 3,500,000 | 21,000,000 | - |
| 22 | கல்வித் திணைக்களம் | 84101 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 1,500,000,000 | 600,000,000 | 3,900,000,000 | - |
| 23 | காணி, நீர்பாசன, விவசாய மற்றும் கால்நடை உற்பத்தி, கால்நடை சுகாதாரம் மற்றும் மீன்பிடி அமைச்சு | 85001 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 6,000,000 | 2,000,000 | 16,000,000 | - |
| 24 | காணி ஆணையாளர் திணைக்களம் | 85101 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 7,500,000 | 4,000,000 | 22,250,000 | - |
| 25 | விவசாய திணைக்களம் | 85201 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 25,000,000 | 13,000,000 | 84,000,000 | - |
| 26 | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரம் திணைக்களம் | 85301 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 15,000,000 | 7,500,000 | 29,000,000 | - |
| 27 | உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் | 86101 | மாகாண அ அரச அலுவலர் முற்பணம் | 2,000,000 | 1,400,000 | 5,200,000 | - |
| | ஏனைய முற்பண கணக்குகள் | | உப தொகை | 138,700,000 | 55,900,000 | 45,850,000 | 5,200,000 |
| 28 | மாகாணசபை செயலாளர் அலுவலகம் | 80102 | சபை உறுப்பினர்களுக்கு பல்வேறு முற்பணம் | 26,400,000 | 2,100,000 | 24,000,000 | - |
| 29 | முகாமைத்துவ பயிற்சி நிலையம் - புஸ்ஸல்ல | 80502 | பயிற்சி மத்திய நிலையத்தின் முற்பணக் கணக்கு | 10,500,000 | 3,500,000 | 800,000 | 250,000 |
| 30 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்தியம், மற்றும் மகளிர் விவகாரம், கூட்டுறவு வியாபாரம் மற்றும் உணவு, | 81004 | சப்பிரகமுவ மாகாண கேட்போர்கூட முற்பணக் கணக்கு | 1,000,000 | 500,000 | 550,000 | |

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சு /திணைக்களம் | விடய இலக்கம் | முற்பண வகைகள் | உச்ச எல்லை | குறைந்த பட்ச பெறுகை எல்லை | வரவு மீதியின் அதிகபட்ச எல்லை | பொறுப்புக் களின் எல்லை |
| 30 | பயணிகள் போக்குவரத்து, மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடகம் மற்றும் வீடமைப்பு, நிர்மானத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | | | | | | |
| 31 | ஆயுர்வேத திணைக்களம் | 81202 | பின்னவல பங்சகரும நிலையம் | 1,800,000 | 300,000 | 500,000 | 500,000 |
| 32 | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | 83102 | ஆடை வேலைத்தளங்கள் அமைத்தல் மற்றும் நிர்வாகம் | 52,000,000 | 20,000,000 | 10,000,000 | 2,000,000 |
| 33 | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | 83103 | சிறு கைத்தொழில் வேலைத்தளங்கள் அமைத்தல் மற்றும் நிர்வாகம் | 15,000,000 | 8,000,000 | 8,000,000 | 2,000,000 |
| 34 | கல்வி, தகவல் தொழிநுட்பம் கலாசார விவகார அமைச்சு | 84002 | மெனேரிபிட்டி- அடலுகம கல்வி அபிவிருத்தி நிலைத்தின் முற்பணக் கணக்கு | 12,000,000 | 7,000,000 | 1,500,000 | 250,000 |
| 35 | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | 85302 | உதுகொட கால்நடை அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தின் முற்பணக் கணக்கு | 20,000,000 | 14,500,000 | 500,000 | 200,000 |

EOG 02 - 0179

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.